செ.வெ.எண் - 57

நாள்: 23-03-2017

<u>செய்திக்குறிப்பு</u>

திருநெல்வேலி மாவட்ட ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டம் திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையில் சென்னை ஓய்வூதிய இயக்குநரால் வருகிற 19.04.2017 புதன்கிழமை அன்று காலை 10.30 மணியளவில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக தரைத்தளத்தில் உள்ள மக்கள்குறைதீர்க்கும் கூட்ட அரங்கில் வைத்து நடைபெற உள்ளது.

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அரசு துறைகளில் பணியாற்றி ஓய்வு பெற்ற ஓய்வூதியதாரர்கள், தங்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய பலன்கள் கிடைக்கப்பெறாமல் நிலுவை இருப்பின், தங்களுடைய குறைகளைத் தெரிவித்து விண்ணப்பங்களை இரட்டைப் பிரதிகளில் கீழ்கண்ட விபரங்களுடன் விண்ணப்பிக்க வேண்டுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

1.மனுதாரர் பெயர் மற்றும் முகவரி (கைபேசி எண்ணுடன்)

2.பணியாற்றியதுறை மற்றும் தொலைபேசி எண் விபரம்

3.(Ppo) ஓய்வூதிய எண் மற்றும் ஓய்வுபெற்ற நாள்

4.கோரிக்கையின் சுருக்கம்

5.எந்த அலுவலகத்தில் கோரிக்கை தற்போது நிலுவையில் உள்ளது

மேற்படி விபரங்களை தெளிவாக குறிப்பிட்டு ஓய்வூதியர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை இரு பிரதிகளில் 03.04.2017-க்குள் நேரடியாக இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைத்திட கேட்டுக் கொள்ளப்படுகிறது. 03.042017 தேதிக்கு பின் கிடைக்கப்பெறும் மனுக்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. எனவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் 19.04.2017 அன்று நடைபெறும் ஓய்வுற்றோர் குறை தீர்க்கும் நாள் கூட்டத்திலும் தவறாது கலந்து கொண்டு இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

23.3.2017

மாவட்ட ஆட்சித்தலைவருக்காக,
திருநெல்வேலி.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
திருநெல்வேலி

23.3.17